கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

இரண்டாம் வருட / முதலாம் அரையாண்டு பொது / சிறப்புக் கலைமாணித் தேர்வு 2013 /2014
(மார்ச்/ஏப்ரல் 2016)

# TL/S 2113 ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாறு – கி.பி 19ஆம் நூற்றாண்டு வரை
# History of Sri Lankan Tamil Literature – Up to 19th Century

நேரம்: 03 மணித்தியாலங்கள்

**பின்வருவனவற்றுள் எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்குக.**

01. அ) ஈழத்தில் ஆரியச்சக்கரவர்த்திகள் காலத்திற்கு முன்னர் தோன்றியதாகக் கருதப்படும் இலக்கிய அடையாளப்படுத்தல்கள் பற்றிச் சுருக்கமாக எடுத்துக் காட்டுக. (05 புள்ளிகள்)

   ஆ) ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தில் தோன்றிய சமயச் சார்புடைய இலக்கியங்களின் பண்புகள் குறித்து விபரிக்குக. (20 புள்ளிகள்)

02. ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தில் தோன்றிய காவியங்களின் இலக்கியக் கூறுகள் பற்றி மதிப்பிடுக. (25 புள்ளிகள்)

03. ஒல்லாந்தர் காலத்தில் உள்ளூர் பிரபுக்களைப் பாட்டுடைத் தலைவர்களாகக் கொண்டு இலக்கியம் படைக்கும் போக்கு முனைப்புப் பெற்றமைக்கான காரணங்களை எடுத்துக் கூறி, அத்தகைய இலக்கியங்களின் இலக்கிய முக்கியத்துவத்தை மதிப்பீடு செய்க. (25 புள்ளிகள்)

04. அ) கி.பி 19ஆம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ் இலக்கியத்தில் புதிய மாற்றங்கள் ஏற்படுவதற்கு ஏதுவாக அமைந்த நிலைமைகள் யாவை? (05 புள்ளிகள்)

   ஆ) இக்கால இலக்கியங்களின் சமூகச் சார்புத் தன்மை பற்றி விபரிக்குக. (20 புள்ளிகள்)

05. நாவல் இலக்கியத்திற்குரிய பண்புகளை ஆரம்ப கால ஈழத்துத் தமிழ் நாவல்கள் கொண்டிருக்கின்றனவா? ஆராய்க. (25 புள்ளிகள்)

06. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்குக் குறிப்புரை எழுதுக.

   அ) பிற்கால இலக்கிய உருவாக்கத்தில் ஆரியச் சக்கரவர்த்திகள் கால இலக்கியங்களின் செல்வாக்கு.

   ஆ) போத்துக்கேயர் கால ஈழத்துத் தமிழ் இலக்கியப் போக்கு.

   இ) ஈழத்தில் அறிவியல்சார் நூல்களின் உருவாக்கம்.

   ஈ) கி.பி 19ஆம் நூண்றாண்டில் ஈழத்தவரின் முன்னோடிப் பதிப்பு முயற்சிகள்.

(12½ x 2 = 25 புள்ளிகள்)

*********************************************************